ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

***01. 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக***

1. ''வாழியவன் தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
   ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி''
   அ. காவேரி சோழன் என்போர்க்கிடையான உறவு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
   ஆ. காவேரியின் வளம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

2. ''தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோகம்
   புரிந்ததொரு வேளை தன்னில்''
   அ. மனமொன்றிய புத்தகவாசிப்பினை எடுத்துக்காட்டும் அடிகளை குறிப்பிடுக?
   ஆ. புத்தகவாசிப்பின் மூலம் பெற்ற அனுபவங்களில் இரண்டினை குறிப்பிடுக?
3. ''சரித்திரச்சாலையை பார்க்கின்றேன் அங்கும் மரங்கள்''
   அ. இவ்வாறு கூறிய கவிஞர் யார்?
   ஆ. சரித்திரச்சாலையில் அவர் கண்டதாக குறிப்பிடும் மரங்கள் எவை?
4. ''ஒரு திருப்தியான முடிவுக்கு வந்தவனாக எழுந்து நிற்கின்றேன். இந்த ரியால் நோட்டுக்காக வழக்காடி நிருபிப்பதற்கு எந்த ஆவணமும் கிடையாது. நோட்டையும் கடிதத்தையும் பெட்டியிலே வைத்து இறுக மூடிவிடுகிறேன. கூடவே மனசாட்சியையும் தான்''
   அ. இக்கூற்றோடு தொடர்புபட்டவர் யார்?
   ஆ. ''இத்தொடரில் மூடிவிடுகிறேன் என்ற சொற்கள் உணர்த்தும் கருத்தினை விளக்குக
5. மரணப்படுக்கையில் சீன ஞானி கன்ஃபூசியஸ் தனது சீடர்களுக்கு கூறிய அறிவுரை என்ன?

***02. பின்வரும் பாடல்களை படித்து அதன் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுக***

1. சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
   புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
   தானறிந் தனளோ இலளோ பானாள்
   பள்ளி யானையின் உயிர்த் தென்
   உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே
   அ. இப்பாடலின் திணை துணை ஒழுக்கம் என்பவற்றை குறிப்பிடுக.
   ஆ. தலைவன் ஒருவனது பிரிவுத்துயரம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

   5புள்ளிகள்
2. மத்தளம் கொண்ட வரிசங்கம் நின்றூத
   முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
   மைத்துனன் நம்பி மதிசூதன் வந்தென்னைக்
   கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழிநான்
   அ. இப்பாடல் யாரால், எக்காலத்தில் பாடப்பட்டது?
   ஆ. அவள் கண்ட கனவினை எவ்வாறு எடுத்துரைக்கின்றாள்?
   இ. அக்கால திருமண நடைமுறைகளை குறிப்பிடுக

   5புள்ளிகள்

***03. பின்வரும் வினாவுக்கு விடை எழுதுக***

1. தெளிவு என்ற சிறுகதையில் ஓர் தபாற்காரனின் வறுமை நிலை எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது விளக்குக

   15 புள்ளிகள்